தினமணி 26.4.2025 Page-No-12.

# தேசிய கல்விக் கொள்கையை அனைவரும் ஏற்க வேண்டும்

## குடியரசு துணைத் தலைவர் ஜகதீப் தன்கர்




உதகை ராஜ்பவனில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற துணைவேந்தர்கள் மாநாட்டின் தொடக்க நிகழ்ச்சியில் பங்கேற்றவர்களுடன் குடியரசு துணைத் தலைவர் ஜகதீப் தன்கர், தமிழக ஆளுநர் ஆர்.என்.ரவி உள்ளிட்டோர்.

**உதகை, ஏப். 25:** தேசிய கல்விக் கொள்கையை அனைவரும் ஏற்க வேண்டும் என்று குடியரசு துணைத் தலைவர் ஜகதீப் தன்கர் பேசினார்.

நீலகிரி மாவட்டம், உதகையில் உள்ள ராஜ்பவன் மாளிகையில் தமிழக பல்கலைக்கழகத் துணைவேந்தர்கள் பங்கேற்கும் இரண்டு நாள் மாநாடு வெள்ளிக்கிழமை (ஏப். 25) தொடங்கியது.

இதில் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்ற குடியரசு துணைத் தலைவர் ஜகதீப் தன்கர் பேசியதாவது: காஷ்மீரின் பஹல்காமில் நடைபெற்ற தாக்குதல், பயங்கரவாதம் உலகளாவிய அச்சுறுத்தல் என்பதையும் முழு மனித குலமும் ஒருங்கிணைந்து எதிர்கொள்ள வேண்டும் என்பதையும் நினைவூட்டுகிறது.

பாரதம் அமைதியை விரும்பும் நாடு. உலகமே ஒரு குடும்பம் (வசுதைவ குடும்பகம்) என்பதே நமது கலாசாரமாகும். தனிநபர், அரசியல், குழு நலன்களைவிட தேசத்தின் நலனுக்கே நாம் முன்னுரிமை அளிக்க வேண்டும்.

**சவால்களுக்குத் தீர்வுகள் தேவை:** தொழில்நுட்ப வளர்ச்சி காரணமாக ஏற்பட்டுள்ள இடையூறுகளால் பாரதம் மட்டுமல்ல, முழு உலகமுமே இப்போது கடும் சவால்களை எதிர்கொண்டு வருகிறது. ஒவ்வொரு நொடியும் பெரும் மாற்றம் நிகழ்ந்து கொண்டிருக்கிறது. சர்வதேச நிலை சிக்கலாகிக் கொண்டே இருக்கிறது. சவால்கள் அதிகரிக்கும்போது, நாம் உறுதியுடன் அவற்றை எதிர்கொள்வதுடன் அதற்கான தீர்வுகளையும் அளிக்க வேண்டும்.

கல்விப் பணி, ஆசிரியர்கள் உள்பட பல்கலைக்கழகங்கள் எதிர்கொள்ளும் பிரச்னைகள் தொடர்பாக நாம் கருத்துகளைப் பகிர்ந்து கொள்ள வேண்டும்.

**தேசிய மொழிகளுக்கு முன்னுரிமை:** தொடர்புடைய அனைவருடனும் விவாதிக்கப்பட்டு தேசிய கல்விக் கொள்கை வகுக்கப்பட்டுள்ளது. அது நமது கலாசார நெறிமுறைகளையொட்டி உள்ளது. நமது தேசிய மொழிகளுக்கு முன்னுரிமை அளிக்கிறது. வேலைவாய்ப்புக்கு முன்னுரிமை அளிக்காமல் மனிதனின் ஒட்டுமொத்த வளர்ச்சியில் கவனம் செலுத்துகிறது. காலனிய மனோநிலையைத் தகர்க்கிறது.

தேசிய கல்விக் கொள்கை என்பது அரசின் கொள்கை அல்ல. அது நாட்டின் கொள்கை. எல்லோரும் இதை ஏற்றுக் கொள்ள வேண்டும். முழுமையாகப் படித்துப் புரிந்து கொள்ள வேண்டும். நடைமுறைப்படுத்த வேண்டும். அதன் பலன்களைப் பெற வேண்டும்.

**தமிழகம், தமிழுக்குப் புகழாரம்:** துடிப்பான கற்றல் மையமாக தமிழகம் விளங்கி வருகிறது. காஞ்சிபுரம், விழுப்புரம் மாவட்டம், விக்கிரவாண்டி வட்டத்தில் உள்ள எண்ணாயிரம் உள்ளிட்டவை பண்டைய நாள்களில் கல்விக்கு மிகவும் புகழ்பெற்றவையாக உள்ளன. சென்னைப் பல்கலைக்கழகம் 1857-ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. நவீன கல்விக்கு இது முன்னோடியாகும்.

நமது மொழிகள் பாரம்பரிய வளம் மிக்கவை. இவை இலக்கியம், அறிவு ஆகியவற்றின் தங்கச் சுரங்கமாகும். செம்மொழி அந்தஸ்தைப் பெற்ற முதல் மொழி என்ற பெருமைக்குரியது தமிழாகும். கல்வி நிறுவனங்கள் இந்த வளத்தைப் போற்றி பாதுகாத்து வளர்க்க வேண்டும் என்றார்.

**பழங்குடியினருடன் சந்திப்பு:** நிகழ்ச்சிக்குப் பின்பு உதகையில் உள்ள முத்தநாடு மந்தில் வசிக்கும் தோடர் பழங்குடியின மக்களைச் சந்தித்து அவர்களுடன் குடியரசு துணைத் தலைவர் ஜகதீப் தன்கர் கலந்துரையாடினார்.